நெல்லை, சேலம் ஆகிய இடங்களில் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தும் திட்டம்.

197 (*வினா எண் 20066)— திரு. எம்.. சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை, சேலம் ஆகிய இடங்களில் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து வருவதால் எப்போது துவக்கப்படும் என்பது குறித்து தற்போது முடிவெடுக்கப்படவில்லை.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நெல்லை, சேலம் ஆகிய இடங்களில் அமைக்கவிருக்கும் பல்கலைக் கழகங்களில் எந்தெந்த மாவட்டங்களில் உள்ள கல்லூரிகள் அடங்கும்? அதன் அதிகார வரம்பு எந்தெந்தக் கல்லூரிகளுக்கு வரும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, அவைகளெல்லாம் இன்னும் பரிசீலிக்கப்படவில்லை.

கோவை மாவட்டத்தில் தனியார் துறையில் பாலிடெக்னிக் அமைக்கும் திட்டம்.

198—(*வினா எண் 20634)— திரு. கு. ரமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டத்தில் தனியார் துறையில் ஒரு பாலிடெக்னிக் அமைக்க அரசு அனுமதியளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) கோவை மாவட்டத்தில் தற்போது 9 தனியார் பாலிடெக்னிக்குகள் இயங்கி வருகின்றன. அவற்றுள் (1983-84) நடப்பாண்டு முதல் அனைத்துச் செலவினங்களையும் நிர்வாகமே ஏற்று நடத்தும் கோவை, சங்கரர் பல்தொழில் நுட்பப் பயிலகமும் ஒன்று.